**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி – 03 - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி – 03 இன் 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கொழும்பு மாநகர சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348 – எஸ்ஆர்ஐ மற்றும் 3349 – எஸ்ஆர்ஐ ஆம் இலக்க செயற்றிட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன நிகழ்ச்சித்திட்டத்தின அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. 29.4 கிலோமீற்றருடைய கழிவுநீர் வலையமைப்பை இடுதல் மற்றும் மூன்று நீர்பம்பி நிலையங்களை நிர்மாணித்தல் உள்ளடங்கலாக தெற்கு நீர்பிடிப்பு பகுதியின் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை புனரமைத்து விரிவுபடுத்துதல் மற்றும் சேவை வழங்குநரின் நிறுவக ரீதியான கட்டமைப்பையும் திறன் மேம்பாட்டையும் பலப்படுத்தல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 16,401.76 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 112.83 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 13,471.16 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92.29 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 2,930.60 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 20.54 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பாக்கப்படுகிறது. செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 டிசம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதி 2022 ஒக்டோபர் 24 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்றிட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மூன்று மாதங்களுக்கு பிந்தாமல் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 3 மாதங்களுக்குப் பின்னர் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.** **பௌதீக செயலாற்றல்**

**3.1** **செயற்றிட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| | **கூறு** | **2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்** | | |
| | | **சதவீதம்** | **சதவீதம்** | | |
| (அ) | கிருலப்பனை நீர்ப்பிடிப்பு பகுதிக்கு புதிய ஈர்ப்பு சாக்கடைகள், மின்விசைகள் மற்றும் பம்பி நிலையங்களை வழங்குதல். | 100 | 70 | ஒப்பந்தம் 2017 மே 18 இல் தொடங்கப்பட்டு 2020 மே 14 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் ஒப்பந்தம் 2022 ஜூலை 30 வரை நீடிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒப்பந்தம் சுமார் மூன்று ஆண்டுகள் தாமதமாகியமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரரின் மெதுவான பௌதீக முன்னேற்றம், தேவையான வளங்களை தவறாகப் பயன்படுத்துதல், மோசமான திட்டமிடல் மற்றும் சரியான மேற்பார்வையின்மை மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் முடிவுகளில் தாமதம் காரணமாக ஆகும். |
| (ஆ) | கிருள - நாரஹேன்பிட்டி பகுதிக்கு கழிவுநீர் வசதிகளை வழங்குதல் | 100 | ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டத்தில் 92 | ஒப்பந்தம் 2017 ஒக்டோபர் 23 இல் தொடங்கப்பட்டு 2020 ஏப்ரல் 10 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் 2023 டிசம்பர் 31 வரை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | (i) 30 ஆண்டுகளுக்கான காணியின் முழு குத்தகைப் பெறுமதியும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 பெப்ரவரி 28 வரை நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் முறையான குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) புகையிரத திணைக்களத்திலிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியில் வசித்து வந்த 6 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக ரூபா 30,060,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 டிசம்பர் 31 வரை அந்தக் குடும்பங்கள் காணியிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பழுதடைந்த சாக்கடைகளை சீர்செய்தல் மற்றும் தென்பகுதி நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள கொள்ளளவு குறைந்த சாக்கடைகளை உயர்த்தி செயற்படுத்துதல். | 100 | ஒப்பந்ததத்திற்கு முன்னரான கட்டத்தில் 75 | ஒப்பந்தம் 2019 நவம்பர் 01 இல் தொடங்கப்பட்டு 2021 டிசம்பர் 05 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2023 டிசம்பர் 31 வரை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொள்கை அளவில் குறைந்த முன்னுரிமை காரணமாக ஒப்பந்தத்தின் நோக்கெல்லை கொள்கை அளவில் இறுதி செய்யப்படவில்லை. |
| (ஈ) | நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறைமை (FMAS) | 100 | 100 | வடிகாலமைப்பு பிரிவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 3,159,879 பெறுமதியான நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறைமை 2017 முதல் விளைவற்று இருந்தது. | (i) இந்த பொதியை (package) அமுல்ப்படுத்துவதற்கான பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு முறையாக ஒதுக்கப்பட்டிருக்காததுடன் பொதியானது எந்த கணனியில் நிறுவப்பட்டுள்ளது என்ற தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) இந்த பொதியை கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, பொதி நிறுவப்பட்டு 3 ஆண்டு காலத்திற்கு பின்னர் பின் உத்தரவாதம் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு பரிந்துரைத்திருந்த போதிலும் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு எந்த கணக்காய்வுச் சான்றும் முன்வைக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | ஒப்பந்ததாரரிடம் தளங்களை ஒப்படைப்பதில் தாமதம் மற்றும் ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் என்பன முக்கியமாக ஒப்பந்த காலத்திற்குள் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வது தாமதமாவதை விளைவித்தது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | செயற்றிட்டக் காலம் முடிவடைவதற்கு முன்னர் செயற்றிட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 சர்ச்சைத்தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையானது, கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னெற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - 3 இன் கீழ் ஐ.அ.டொலர் 44.37 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரதான உப செயற்றிட்டமாகும், அடிப்படையில், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017 ஜூன் 21 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 டிசம்பர் 14 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், 30 மாத காலதாமதத்திற்குப் பின்னர் 2020 டிசம்பர் 18 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது, மேலும் உடன்படிக்கை 2021 ஒக்டோபர் 21 இல் ஒப்பந்ததாரருடன் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண பணிக்காக மூன்று மாதங்களுக்குள் ஒப்பந்ததாரரிடம் காணி ஒப்படைக்கப்பட வேண்டும். 2022 டிசம்பர் 30 வரை செயற்திட்ட முகாமைத்துவம் காணியை ஒப்படைக்கத் தவறியதால், ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு ரூபா 619 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு பணிநீக்கக் கட்டணமாகச் செலுத்தப்பட்டதுடன் எந்தச் சொத்தையும் உருவாக்காமல் நடப்பு அல்லாத சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டது. இந்தச் செலவினம் வெளிநாட்டுக் கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது நிதிக்கூற்றுக்களில் நட்டமாகக் காட்டப்பட்டால் அது சிக்கலாக இருக்கலாம். எனவே இது நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்தின் கீழ் வழங்கப்படுகிறது. | எனினும், நட்டங்கள் என அடையாளம் காணக்கூடிய பகுதி எதிர்காலத்தில் பதிவழிக்கப்படும். | பெறுமதியை நட்டமாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |